Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 15 2-1947 மாசிமீ 3உ { மலர் 19

## மதம் என்றால் என்ன?

### எது உண்மை மதம்?

பெரியார் பேச்சு

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ராமநாதபுரம் ஜில்லா கீழக்கரையில் 4-2-47ஆம் பிறகும் நபிகள்நாயகம் பிறந்த நாள் விழாவில் ஆற்றிய சொற்பெருக்கு:-

தலைவரவர்களே,

தாய்மார்களே,

தோழர்களே,

இன்றைய இக்கூட்டம் முஸ்லிம் சமுதாயத்திற்கு ஒரு போற்றற்குரிய புனிதமான நாளில் கூட்டப்பட்டதாகும். உலகத்தில் உள்ள சுமார் 60 கோடி மக்களுக்கு மேலாகவே மதச்சம்பந்தமான வழிகாட்டியாயும், ஒப்பற்ற மதக்குருவாகவும் உள்ள ஒரு பேரிஞர், பொதுநலத்தியாகி, நல்ல தொரு தீர்க்கதரிசி என்று கொண்டாடப்பட்ட ஒரு உண்மைப் பெரியார் 'பிறந்தநாள் கொண்டாட்ட' நாளாகும்.

இப்படிப்பட்ட இந்த மதச் சம்பந்தமானநாளில் அந்த மதத்தைச் சேர்ந்தவனல்லாதவன் என்றும், பொதுவாகவே மதங்களுக்கெல்லாமுமே விரோதி என்றும், கடவுளையே மறுப்பவன் என்றும் பலரால் சொல்லப்படுகிற என்னை அழைப்பதும் இந்தக் கொண்டாட்டவிழாவில்பங்கு கொண்டு மக்களுக்குச் சொற்பொழிவாற்ற விரும்புவதுமான காரியத்தைக்குறித்து எவரும் அதிசயப்படாமல் இருக்கமுடியாது:

இந்த அதிசயப்படத்தக்க காரியத்திற்கு உண்டான பெருமை யாருக்குச் சேரும் என்று பார்த்தால் அது இஸ்லாத்துக்கே சேரும். மதச் சம்பந்தமான கருத்துக்களை எடுத்துக் கொண்டால் இஸ்லாம் மதம் என்பது தான் தாராளமான நோக்கத்தைக் கொண்டு இருக்கிறது. ஒரு மதம் என்பது மக்களுக்குள் என்ன கருத்தை உண்டாக்க வேண்டுமோ அந்தக் கருத்தையும் மக்களுக்கு என்ன தொண்டு செய்யவேண்டுமோ அந்தத் தொண்டையும் ஒரு நல்ல அளவுக்கு உண்டாக்கி இருக்கிறது.

தெளிவுபடச் சொல்லவேண்டுமானால் மதம் என்பது மனிதஜீவன்களுக்குத்தான் இருந்து வருகின்றது உலகில் எத்தனையோவித ஜீவராசிகள் இருக்கும்போது மனிதனுக்கு மாத்திரம் ஏன் மதம்? என்றால் மனிதனுக்கு மதம் வேண்டி இருக்கிறது என்று சொல்லலாம். மனிதன் கூடி வாழும் பிராணி, மனிதன் அதிக சிந்தனையாளி என்பதோடு அதற்கேற்ற பகுத்தறிவு அதிகம் உடையவன் ஆதலால் மனிதசமுதாயக்கூட்டு வாழ்வுக்கு ஒரு நியதி—திட்டம்—விதி கொள்கை என்பதான ஏதாவது ஒன்று தேவை இருக்கிறது. அதைத்தான் மக்கள் எப்படியோ மதம் என்று அழைக்கிறார்கள். முஸ்லிம்கள் மதம் என்பதை மார்க்கம் என்றுதான் (இஸ்லாம் மார்க்கம் என்றுதான்) அழைக்கிறார்கள். கிருஸ்தவர்களும் கிருஸ்தவ மார்க்கம் என்றழைக்கிறார்கள். சைவ—வைணவ மார்க்க வினா விடை என்றுதான் நூல்களுக்குப்பெயரிடப்பட்டிருக்கின்றது. தமிழர் பெரிதும் மதத்தைச் சமயம் என்றே சொல்லுகிறார்கள். ஆரியமும் வேதமார்க்கம் என்றுதான் சொல்லப்படுகின்றது. என்வே மதம் என்கின்ற சொல் எந்தமொழி? எப்படி வந்தது? அதற்கு மூல இடம் எது? என்பனவாதிய ஒன்றும் பெரும்பாலோருக்குப் புரிவதற்கில்லாத சொல்லாகவே இருக்கிறது.

ஆனால் சிலர் மதம் என்பது "கடவுளையும் மனிதனையும் சம்பந்தப்படுத்துவது" "கடவுளை மனிதன் அடையச் செய்வது" என்றெல்லாம் என்ன என்னவோ கட்டுக் கட்டுகிறார்கள். இது மகா பயித்தியக்காரத்தனம் அல்லது பித்தலாட்டம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. கடவுளுக்கும் மனிதனுக்கும் மாத்திரம் சம்பந்தம் ஏற்படுவானேன். ஆடு, மாடு, நாய், கழுதை, குதிரை, ஈ, எரும்பு, தேள், பாம்பு, மீன், பூச்சி புழு இவைகளுக்குக் கடவுள் சம்பந்தம் வேண்டாமா? கடவுளை அடையவேண்டாமா? அவை கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை அல்லவா? அல்லது மதமில்லாமலே கடவுளை அடையத்தக்க அவ்வளவு அறிவுள்ளவைகளா? மனிதனுக்கு மாத்திரம் ஏன் இந்தத் தொல்லை? என்று நன்றாய்ச் சிந்தித்துப் பார்த்தால் மனிதனுக்குக் கடவுள் சம்பந்தத்துக்காக மதம் இல்லை என்றும், மனிதனுக்கு மதம் மற்ற மனிதனிடம் நடந்துகொள்ளவேண்டிய தன்மைக்கு வழிகாட்டுவது, கொள்கை விதிப்பது, ஆகியவற்றிற்கே மதம் என்பதும் நன்றாய் விளங்கும். அதை விட்டுவிட்டு, மனிதனிடம் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய தன்மையை அலட்சியப் படுத்திவிட்டு, தனக்கும் கடவுளுக்கும் மாத்திரம் என்றும், தன்னுடைய

நலனுக்கு மாத்திரமே அதாவது தான் மோட்சம் போகவும், தான் நல்ல கதி அடையவும், தனக்கு நல்ல பிறவி, நல்ல செல்வம் ஏற்படவும் என்றும் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இது மாயா உலகம் இது பொய்யான உலகம், இது அநித்தியமான உலகம் இதைப்பற்றிக் கவலை இல்லை; மெய்யான, நித்தியமான பயனளிக்கக்கூடிய உலகம் வேறு இருக்கிறது; அதில் மேனிலை அடையவே மனிதன் பிறக்கிறான், இருக்கிறான், இறக்கிறான் என்ற கற்பனைகளைப் புகுத்தி இதற்காக இகத்தில் என்ன காரியத்தையானாலும் செய்து பரத்தில் இடம் பிடித்து வை என்கின்ற மதம், மடமையும் கொடுமையும், பித்தலாட்டமும் நிறைந்த மதம் என்று சொல்லுவேன் அப்படி நான் சொல்லுவதால்தான் என்னை மத விரோதி என்று சில மதவாதிகள் சொல்லுகிறார்கள் மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று நான் சொல்லுவதும் இப்படிப்பட்ட மதங்களைத் தானே ஒழிய மனிதனிடம் மனிதன் அன்பாய், உபகாரியாய், சமுதாயத்திற்கு ஏற்ற ஒழுக்கமாய், நாணையமாய், பிறர் நலத்தில் பற்றுள்ள அன்பனாய், மற்றவர்களுக்குத் தொல்லை இல்லாதவனாய் நடந்துகொள்ளும் தன்மையை மதம் என்றால் அதைப் போற்றுகிறவனேயாவேன். நானும் கூடுமானவரை அப்படிப்பட்ட மதவாதியேயாவேன்.

ஆனால் இன்று மதங்கள் அப்படி பெரிதும் காணப்படுகின்றனவா? நீங்கள் தனித்தனியே மதவாதிகள் நடத்தையில் இருந்து சிந்தித்துப் பாருங்கள்.

முதலாவதாக,

'என்பேரில் சுமத்தப்பட்ட (இந்து மதம் என்னும்) ஆரிய மதத்தை எடுத்துக்கொள்ளுங்கள். நான் மேலே சொன்ன குணங்களில் எது காணப்படுகிறது? அல்லது காரியத்தில் நடைபெறுகிறது? ஆரிய மதத்தில் பிராமணன், சூத்திரன், சண்டாளன், தேவடியாள் உண்டு. ஆரிய மதத்தில் மோட்சத்திற்காகத் திருடலாம் விபசாரித்தனம் செய்யலாம், கொலை செய்யலாம், பாட்டாளிமக்களை வஞ்சித்து அவர்கள் உழைப்பைக் கொள்ளை கொள்ளலாம், கொடுமைப்படுத்தலாம், பிறவி இழிவு கற்பித்து, மக்களைப் பிரித்துவைத்துச் சோம்பேறிகளும், சூழ்ச்சிக்காரர்களும் ஆதிக்கம் செலுத்தலாம் இன்னும் எத்தனையோ இழிவு கொடுமை அக்கிரமம் செய்யலாம். இவை மததர்ம சாஸ்திரங்களின்படி என்றும் சொல்லலாம். இது எப்படி மக்களுக்குப் பயன்படும்படியாக, வாழ்க்கைக்கு உதவும்படியாக ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட மதமாகும் என்றும் இப்படிப்பட்ட மதங்கள் ஒழிக்கப்படவேண்டாமா என்றும் மதவாதிகளைக் கேட்கின்றேன்.

ஆகவே இப்போதாவது நீங்கள் தெரிந்துகொள்ளலாம். நான் ஏன் மதம் ஒழிக்கப்படவேண்டும், என்று சொல்லுகிறேன் என்பதை.

மதம் மக்களிடம் அன்பு செலுத்த என்று இருக்குமானால் இன்று இந்த நாடு இமயமலைமுதல் குமரிவரை குழப்பத்தில், கொள்ளையில், கொலையில், படுநாசவேலையில் அல்லல் படுவதின் காரணம் என்ன? அரசியல் குழப்பம் என்று சொல்லி மக்களை வஞ்சித்து மதவெறியைக் கிளப்பிவிட்டு, மதத்திற்காகவென்று, மதவெறிகொண்டு, போராடிக்கொள்வதல்லாமல் வேறு எதற்குகாக என்று யாராவது சொல்லமுடியுமா?

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இன்றைய கலவரம் ஆரியத்துக்கும் ஆரியமல்லாததற்கும் என்பதல்லாமல் வேறு என்ன? தெளிவாய்ச் சொல்லுகிறேன்; இந்து முஸ்லிம் என்றால் என்ன? ஆரியர்—அனாரியர் என்பதல்லாமல் வேறு என்ன? "பிராமணர் பிராமணரல்லாதார்" அல்லது ஆரியர் திராவிடர் என்றால் ஆரியர் அனாரியர் என்பதல்லாமல் வேறு என்ன? ஜாதி இந்துக்கள் ஷெட்யூல் வகுப்பார் சண்டை என்றால என்ன? ஆரிய மதக்கொள்கைப்படி மேல் ஜாதியார், ஆரியமதக் கொள்கை ஏற்றுக்கொள்ளாத கீழ் ஜாதியார் என்னப்படும் ஆரியரல்லாதார் என்பதல்லாமல் வேறு என்ன? இது போலவே சீக்கியர் கூப்பாட்டுக்கும், பார்சி கூப்பாட்டுக்கும், கிறிஸ்தவர் கூப்பாட்டுக்கும் ஆரிய அனாரிய மதச்சண்டை என்பதல்லாமல் வேறு என்ன? இந்த இலட்சணத்தில் இவர்கள் ஒவ்வொருவரும் சண்டையிடக்காரணம் அவரவர்கள் மதப் (கலாச்சாரத்தின்)படி நாடு ஆளப்படவேண்டும் என்பதுதானே முன்னணியிலிருக்கிறது?

காங்கிரஸ் ராமராஜ்யப்படி, முஸ்லிம் லீக் இஸ்லாம் போதனைப்படி, சீக்சிரந்தசாஹிப்படி, திராவிட கழகம், ஷெட்யூல்டு வகுப்பு மனித தர்ம (சமதர்ம)ப்படி திராவிட கலாச்சாரக்கொள்கைப்படி, கிறிஸ்தவர் பைபிள்படி அந்தந்த மதத்தினரே அந்தந்த மதத் தத்துவத்தின்படி ஆளவேண்டும் என்று சொல்லித்தானே கலகம் கிளப்பப்படுகின்றது?

ஆகவே அரசியல் போராட்டத்துக்கும் சமுதாய போராட்டத்திற்கும் மதம் காரணமல்லாமல் திட்டம் காரணம் என்று எதைச் சொல்ல முடியும்? திராவிட கழகத்தைப் பொறுத்தவரை மதம் காரணமாக முஸ்லிம்களிடத்தில் யாதொரு தகராறும் இல்லை என்று சொல்லுவேன். இஸ்லாத்துக்கும் திராவிடத்துவத்திற்கும் வேஷம்தான் பேதமே தவிர மதத்துவத்தில் பேதமில்லை. திராவிட கழகம் ஒரு ஜாதி, ஒரு கடவுள் என்கின்றதை ஆட்சேபிப்பதில்லை. இஸ்லாமும் ஒரு ஜாதி, ஒரு கடவுள் என்பதை ஆட்சேபிப்பதில்லை. இரு மார்க்கங்களும் மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு பேதம் இல்லை என்கின்றன. நம் திராவிடநாட்டைப் பொறுத்தவரை பேசப்போனால் இஸ்லாமியர் கிருஸ்தவர், திராவிடர் ஆகிய முப்பிரிவாரும் ஒரே இனத்தவர், ஒரே வழி வந்தவர்கள் என்று சொல்லலாம். இப்படிப்பட்ட நாட்டில் இன்று குழப்பமும், கொள்ளையும், கொலையும், கொடுமையும் நடைபெறவும் நடக்குமோ என்று பயப்படவுமான நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் ஆரிய மத தூண்டுதல் அல்லாமல் வேறு என்னவாய் இருக்கமுடியும்? ஒரு இஸ்லாம் திராவிடனும், கிருஸ்தவ திராவிடனும், முஸ்லிம் கிருஸ்து அல்லாத திராவிடனும் இந்நாட்டு இனத்தவன், இந்த நாட்டில் பிறந்தவன், இந்த நாட்டில் வாழ்கிறவன், இந்த நாட்டில் சாகிறவன், இந்த நாட்டில் தேடிய பொருளையும், வேறு நாட்டில் தேடிய பொருளையும் இந்த நாட்டிலேயே செலவழித்து, இந்த நாட்டிலேயே வைத்துவிட்டுச் சாகிறவன். இப்படிப்பட்டவர்களுக்கு இந்த

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

ரோஜா முத்தையா

# கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஜர்மனியிலுள்ள சிற்றரசர்கள் தங்களை பொதுஜனங்கள் கேட்பதற்கு முன்னதாகவே தாங்களே அரசியல் நிர்வாகத்தைப் பிரதிநிதித்துவ ஆட்சியாக்கிவிட்டனர். இந்த செய்கை செய்யத் துணிந்தவர்களில் முதன்மையானவன் பேடன். இரண்டாதவன் ஹேஸி. பிரஷ்யாவும் ஆஸ்டிரியாவும் முன்வராவிடில் ஜர்மனி முன்வந்திருக்குமா என்பது சந்தேகமே.

மார்ச்சு மாதம் 13ந்தேதி வியன்னாவில் புரட்சித் தீப் பற்றிக்கொண்டது. ஜுவாலையின் ஒளி புரட்சிக்காரத் தலைவர்கள் கண்ணுக்குத் தெரிந்தது. பரமானந்தமடைந்தனர். 3வரம் லூயிபிலிப் குளிர் ஜுரத்தால் கஷ்டப்பட்டான். கடைசியாக துறவுபூண்டு பாரிசைவிட்டு ஓட்டமெடுத்தான். பிற்போக்காளர்களுக்குத் தலைவரான மெட்டர்நிச் அரசன் நாட்டைவிட்டு ஓடினான் சக்ரவர்த்தி குடியாட்சியை அளித்துவிடுகிறேன் என்று உறுதியளித்துவிட்டான். ஹங்கேரி கோசுத் என்ற நூலாசிரியரைத் தலைவராகக்கொண்ட குடியாட்சி தோன்றியது. பெர்லினில் போர்மேகம் சூழ்ந்துகொண்டது. வீதிகள் போர்க்களமாய் விளங்கின. கடைசியில் வில்லியம் பிரடரிக் என்ற அரசன் சரண்புகுந்தான்; ஜனப்பிரதிநிதி ஆட்சியை அளித்தான். அவனுடனிருந்து புரட்சிக்காரர்களை எதிர்த்து இறந்தவர்களின் தகனத்தை மாடியிலிருந்து அவனே நேரில் கையில் தொப்பி ஏந்தியவனாய் நின்று பார்க்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டான். பவேரியா அரசனும் மதிகலங்கினான். தன்னுடைய உயிரினும்மேலாக மதித்துவந்த ஸ்பானிய காதலியை பிரிந்து நிற்கச் செய்தனர். ஜனப்பிரதிநிதித்துவ ஆட்சியை அளிக்க வற்புறுத்தப்பட்டான். அரசாட்சியை விட்டு ஓடிப்போகும்படிசெய்துவிட்டனர். கடைசியாகப் ராங்பர்ட் என்ற ஊரில் அகில ஜர்மன் பார்லிமெண்டு கூட்டப்பட்டது. சிற்றரசர்கள் ஆட்சிக்குச் சாவுமணி அடித்து ஜர்மனியின் ஐக்கியத்தை உண்டுபண்ணுவதே இந்தப் பார்லிமெண்டு கூட்டியதின் அடிப்படையான நோக்கமாகும்.

ஐரோப்பா முழுவதும் இவ்வாறு தத்தளித்துக்கொண்டிருக்கையில் மார்க்ஸுக்கும் ஏஞ்சல்சுக்கும் வேலைத் தொல்லை தாங்கமுடியவில்லை. தேசந் தேசமாக ஓடித்திரியவேண்டியதாயிற்று. அங்குமிங்கும் அல்லும் பகலும் சுற்றி வரவேண்டியவர்களாயினர். பிரஸ்ஸல்ஸிலிருந்து பாரிசுக்கும், பாரிசிலிருந்து லண்டனுக்கும் லண்டனிலிருந்து பாரிசுக்குமாக பறந்துகொண்டிருக்கலாயினர். இச்சமயங்களில் அவர்கள் இருவரும் எப்பொழுதும் கூடியேயிருக்கவில்லை. மார்க்ஸ் கடைசியாக லண்டன்போய் சேர்ந்தபோது, ஏஞ்சல்ஸ் எல்பர்பீல்டிலும் பேடனிலும் தன் முயற்சிகள் பலனளிக்காததைக்கண்டு ஸ்விட்சர்லாந்துக்கு ஓடிச்சேர்ந்தார். அவர்கள் செய்த முக்கியமானவேலை நியூரீனிச் சீட்டங் என்ற பத்திரிகையைத் தவறாமல் நடத்தி வந்ததேயாகும். இப்பத்திரிகையொன்றுதான் அக்காலத்தில் தெளிவாக விஷயங்களை எடுத்துரைத்து வந்தது. புரட்சியைப் பற்றிய போதிய அறிவுடையவன்தான் இதை மதிப்பான். அவனே இப்பத்திரிகையின் மதிப்பை உணர்வான். அவ்வப்போது நடந்த சம்பவங்களால் அப்பத்திரிகையின் பொது கோட்பாடு மெய்ப்பிக்கப்பட்டு வந்தது.

புரட்சி ஓர் அளவுக்கு வெற்றிகரமாய் வந்துகொண்டிருக்கையில் அரசர்கள் ஸ்தானத்திற்கு முதலாளிகள், பணக்காரர்கள் தோன்றலாயினர். உலகில்உள்ள வேற்றுமைக்கும் வறுமைக்கும் இவர்களே காரணம் எனப் புரட்சிக்காரர்கள் எண்ணினார்கள். இப்பொழுது தொழிலாளர்கள் முதலாளிகளோடு போர் தொடுக்கவேண்டியதாயிற்று. இதற்குள் புரட்சிக்காரர்களும் தொழிலாளர்களும் களைத்துவிட்டார்கள். துரைத்தனத்தை மாற்றியமைத்ததிலே மகிழ்ந்துவிட்டார்கள். அப்படியிருந்தும் பாரிசில் தொழிலாளர்களுக்கும் முதலாளி வர்க்கத்தினர்களுக்கும் கலகம் மூன்று நாள் விடாது நடந்தது. கடைசியில் லூயிபிலிப் ஓட்டத்தோடு அங்குள்ள புரட்சி அடங்கிற்று. இவ்வாறு புரட்சி இயக்கம் அடங்கினதற்குச் சில முக்கியமான காரணங்களும் இருந்தன. அதாவது ஜர்மனியில் ஏஞ்சல்ஸ் மட்டும் பேடன் படையோடு போராடவேண்டியிருந்தது ரோமில் தோன்றிய புரட்சியை ரேசினியும் வேனில்லில் தோன்றி புரட்சியை மேனினும் அடக்கிவிட்டனர். ஹங்கேரியில் புரட்சிக்காரர்கள் ஒருசமயம் வெற்றிபெற்றிருக்கமுடியும். ஆனால் ஆஸ்திரியா தேச சக்கரவர்த்தி ரஷ்ய மன்னனாகியசாரின் உதவியைக்கொண்டு அடக்கிவிட்டான். கடைசியாக

(தொடர்ச்சி 7-பக்கம்)

குடி அரசு

1947 ஆம் பிப்ரவரி 15உ

# காமராஜர் கண் விழிப்பாரா?

"பிரகாசம் பந்துலுகாருவின் மந்திரிசபைக்கு அந்தியகாலம் வந்துவிட்டது; இன்றைக்கோ நாளைக்கோ இன்னும் சற்று நேரத்திலோ பந்துலுகாருவின் மந்திரிசபை கலைந்துவிடும்; சென்னை சட்டசபையிலுள்ள காங்கரஸ் கட்சியைச் சேர்ந்த 193 உறுப்பினர்களில் சுமார் 125 உறுப்பினர்கள் மந்திரி சபையைக் கலைத்துவிட முயலுவதின் அறிகுறியாகக் கையொப்பமிட்டுவிட்டனர்; புதிதாக அமைக்கப்படப்போகும் காங்கரஸ் மந்திரிசபையில் 'யார் முதல் மந்திரியாக இருப்பார், யார் யார் புதிய மந்திரிகளாக நியமிக்கப்படுவர், இப்போதுள்ள மந்திரிகளுள் யார் யார் தங்களின் மந்திரிப் பதவியை இழப்பர், யார் யார் மேற்கொண்டும் மந்திரிகளாக இருக்க அனுமதிக்கப்படுவர்' என்று முடிவு செய்தாய்விட்டது" என்றெல்லாம் பேசப்பட்டது யாவரும் அறிந்ததே.

"இடைக்கால சர்க்காரின் உறுப்பினராயுள்ள கனம் இராஜகோபாலாச்சாரியாரின் முயற்சிதான் பிரகாசம் பந்துலுகாருவின் மந்திரிசபை கவிழ்க்கப்படப்போவதற்குக் காரணர்; புதிதாக அமைக்கப்படும் மந்திரிசபையில் ஆச்சாரியாரே முதன் மந்திரியாக இருப்பார். அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்துவிட்டன" என்று பேசினர் ஒருசாரார்.

'தோழர் காமராஜநாடாரின் முயற்சியால்தான் பந்துலுகாருவின் மந்திரிசபை கலைக்கப்படப்போகின்றது. டாக்டர் சுப்பராயன்தான் வரப்போவதாகச் சொல்லப்படும் மந்திரிசபையில் பிரதம மந்திரியாக இருப்பார்' என்றும் பேசப்பட்டது ஒரு சாராரால்.

'தோழர் பக்தவச்சலம்கூட முதல் மந்திரியாக வரலாம்' என்று ஹேஷ்யம் கூறினர் ஒரு சிலர். ஒரு காலத்தில் காங்கரஸ் பிரபல தலைவராகக் கருதப்பட்டவரும், கொஞ்சகாலமாக விளம்பரப்படுத்தப்படாதவருமான 'ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருக்குக்கூட அதிர்ஷ்டம் பிறந்துள்ளது' என்றும் பேசப்படுகின்றது.

ஆச்சாரியார் கோஷ்டியினருக்குப் புதிய மந்திரிசபையில் அதிக மந்திரிப்பதவிகள் கிடைக்கும் என்றும், இல்லை காமராச நாடார் கோஷ்டியினருக்குத்தான் அதிக மந்திரிப் பதவிகள் கிடைக்குமென்றும் வதந்திகள் உலவி வருகின்றன.

ஆச்சாரியார் கோஷ்டியாரும் காமராஜர் கோஷ்டியாரும் ஒன்றுசேர்ந்துதான் பிரகாசம் மந்திரிசபைக்கு இறுதிக்காலத்தை நிர்ணயத்துவிட்டனர் என்றும் பேசப்பட்டது

மேற்கூறியவாறெல்லாம் பேசப்பட்டதற்கேற்ப 13-2-4( காலையில் 'பிரகாசம் தலைமையில் சென்னை சட்டசபைக் காங்கரஸ்கட்சி நம்பிக்கை இழந்துவிட்டது' என்ற தீர்மானத்தை முறைப்படித் தயாரித்து பிரதம மந்திரி பிரகாசம் அவர்களிடமே கொடுத்துவிடப்பட்டது என்ற செய்தியை அறிகின்றோம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப்பற்றி விவாதிப்பதற்காக ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் காங்கரஸ் சட்டசபைக் கட்சியைச் சர்க்கார் மாளிகையில் கூட்டுமாறு 30 பேர்கள் கையெழுத்திட்டுள்ள ஓர் வேண்டுகோளும் பிரதமரிடம் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. காங்கரஸ்கட்சியைச்சார்ந்த 196 மெம்பர்களில் 110 பேர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளதாகவும் அறிகின்றோம். மேற்கொண்டும் 15 பேர்களுக்குமேல் கையெழுத்திடுவர் என்றும் தெரிகிறது. இத்தகவல்கள் ஸர்தார் படேல், சி. ஆர்., கிருபளானி ஆகியோருக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிகிறது.

காங்கரஸ் சட்டசபைக்கூட்டம் கூட்டப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு இரண்டு நாட்களில் மாற்றம் அளிப்பதாகப் பிரதமர் கூறினாராம். இதைப்பற்றி ஆலோசிக்க பிரதமர் பிரகாசம் வடநாட்டிற்குக் காவடி தூக்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்கொண்டு என்ன நடவடிக்கை நடந்தாலும் பிரகாசம் பந்துலுகாரின் தலைமைப் பதவிக்கு இறுதிக்காலம் கிட்டிவிட்டது. பந்துலுகாருக்கு இந்நிலைமை ஏற்பட்டதில் நமக்கு ஆச்சரியமில்லை. அவர் ஆட்சிபீடத்தில் அமர்ந்ததிலிருந்து எதிர்ப்புச் சக்திகளை வளர்த்துக்கொண்டே வந்துள்ளார்.

ஆலையொழிப்புத் திட்டத்தால் ஆந்திர கேசரி பிரகாசம் அனைவருடைய ஆத்திரத்தையும் தேடிக்கொண்டுள்ளார். அவசர அடக்குமுறைச் சட்டம் நாட்டிலே ஓர் கொந்தளிப்பையுண்டுபண்ணியது மாத்திரமன்றிக் காங்கரஸ்காரர்களே பந்துலுகாருவை நேரிடையாக எதிர்க்கும் நிலைமையையுண்டாக்கிவிட்டது. தொழிலாளர்களின் இயக்கங்களையும், தொழிலாளர்களையும் அடியோடு நசுக்குவதற்குப் பந்துலுகாரு எடுத்துக்கொண்ட முயற்சி தொழிலாளர்களின் ஆத்திரத்தையும், வெறுப்பையும்

அவருக்குத் தேடிக் கொடுத்துவிட்டது.

காங்கரஸ் ஆட்சியில் மக்களனைவரும் இன்புற்று வாழ்வதற்கு நல்வழிபிறக்கும் என்று கனவு கண்டு கொண்டிருந்த பொதுமக்கள் 'அட்வைசர் ஆட்சியே காங்கரஸ் ஆட்சியைவிட ஆயிமடங்கு மேன்மையுடையது' என்று நினைக்கும்படிப் பந்துலுகாருவின் ஆட்சி செய்துவிட்டது. எனவே இவ்வெதிர்ப்புக்களுக்கிடையே பந்துலுகாருவின் மந்திரிசபை நீடித்திருக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

இப்போழ்திருக்கும் பந்துலுகாருவின் மந்திரிசபை கலைந்த பிறகு வரப்போவதாகக் கருதப்படும் மந்திரிசபையில் யார் முதல் மந்திரியாக வருவார் என்பது சிந்திக்கத்தக்கது. நாம் சிந்திப்பதைவிட காங்கரஸ் திராவிடர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்பதுதான் நமது பேரவா.

இப்போது ஆட்சி செலுத்தும் காங்கரஸ் மந்திரிசபை ஏற்படும் நேரத்தில் என்ன நடந்தது? ஆச்சாரியார் முதல் மந்திரியாக வரக்கூடாது என்று தோழர் காமராச நாடாரும் அவரின் கோஷ்டியாரும் அரும்பாடு பட்டனர். காந்தியார் உள்பட எல்லா மேலிடத்துக் காங்கரஸ்காரர்களும் ஆச்சாரியாரைச் சென்னை சட்டசபையில் முதல் மந்திரியாக ஆக்கவேண்டுமென்று பாடுபட்டனர். என்றாலும் தோழர் காமராச நாடார், தான் கொண்ட குறிக்கோளை ஓுளவில் நிறைவேற்றிவிட்டார். ஆச்சாரியார் முதன்மந்திரியாக வர முடியவில்லை. அதற்காகத் தோழர் காமராஜநாடார் போற்றப்பட்டார், புகழப்பட்டார் ஆச்சாரியாருக்கு அரசியல் வாழ்க்கையில் முற்றுப்புள்ளி வைத்தாய்விட்டது' என்றுகூடப் பேசப்பட்டது. ஆனால் மேலிடத்து ஆதரவு ஆச்சாரியாருக்கு பெரும் பதவியைத் தேடிக் கொடுத்துவிட்டது.

ஆனால் ஆச்சாரியாரைச் சென்னை மாகாணத்திருந்து ஒழித்துக்கட்டுவதில் வெற்றி கண்டதாகப் புகழப்பட்ட தோழர் காமராசநாடார் ஒருவகையில் ஏமாந்தும் விட்டார் என்றும் கூறவேண்டும்.

தோழர் முத்துரங்கமுதலியாரை முதல்மந்திரியாக்கிவிடலாம் என்று மறைமுகமாக வேலைசெய்தார் தோழர் காமராசநாடார் ஆனால் வெற்றிபெற முடியவில்லை. காரணம் என்ன? ஆச்சாரியார் முதல்மந்திரியாக வருவதற்கில்லையே என வருத்தப்பட்ட ஆச்சாரியார் கோஷ்டியினர் ஒரு திராவிடனை முதல் மந்திரியாக்க விரும்பவில்லை. 'ஒரு திராவிடன் முதல் மந்திரியாக வரக்கூடாது, ஒரு பார்ப்பனன்தான் முதல் மந்திரியாக வரவேண்டும்; அப்பார்ப்பனன் தங்களுக்குப் பகைவனாயினும் சரியே' என்று கருதினர் ஆச்சாரியார் கோஷ்டியினர். அங்ஙனம் அவர்கள் செய்த முடிவுதான் முதல்மந்திரி தேர்தலின் போது அவர்களை நடுநிலைமையாக இருக்கச்செய்தது. அந்நடுநிலைமைதான் அன்று ஆந்திர கேசரி முதல் மந்திரியாக வரும்படிச் செய்தது.

பிரகாசம் பந்துலுகாருவின் மந்திரிசபையைக் கலைக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் ஏன் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றோமென்றால் தோழர் காமராசநாடார் கண்விழித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான். பார்ப்பனர்கள் ஆச்சாரியாரே வரப்போவதாகக் கருதப்படும் மந்திரிசபையில் முதல் மந்திரியாகவேண்டும் என்பதற்கு அரும்பாடு படுவர், பார்ப்பனர்களது கண்ணோட்டத்தினாலேயே காலத்தைக்கழிக்கும் ஒரு சில திராவிடர்களும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ஆச்சாரியாரை முதல்மந்திரியாக்க முயலுவார் என்பது திண்ணம். எனவே பார்ப்பனர்களின் எண்ணம் ஈடேறாமலிருப்பதற்குக் காமராசநாடார்தான் கண்விழித்து வேலைசெய்யவேண்டும். தங்களுக்கு விரோதியாயிருந்தாலும் ஒரு பார்ப்பனர்தான் முதல் மந்திரியாக வரவேண்டுமென்று முன்னர் பாடுபட்ட பார்ப்பனர்கள் இப்போழ்து ஒரு திராவிடன் முதல் மந்திரியாக வரச் சம்மதிக்க மாட்டார்கள் என்பது உறுதி. இப்போழ்து பிரகாசம் பந்துலுகாருவின் மந்திரிசபையைக் கவிழ்ப்பதற்காக ஆச்சாரியார் கோஷ்டியினர் தோழர் காமராச நாடாருடன் ஒத்துழைத்தாலும் பிறகு யார் முதல் மந்திரியாக வரவேண்டும் என்ற கேள்வி எழும் நேரத்தில் இராசகோபாலாச்சாரியாரே முதல் மந்திரியாக இருக்கவேண்டும் என்று அத்தனைப் பார்ப்பனர்களும் முடிவு கட்டிவிடுவர். ஏன்? பிரகாசம் பந்துலுகாருகூட அம்முடிவிற்கு வந்தாலும் வரலாம்! ஏற்கனவே பந்துலுகாரு முதல் மந்திரியாக வந்ததற்கே காரணம் ஆச்சாரியார் கோஷ்டியினர்தான் என்று அவர் உணர்ந்திருப்பாரே! அதற்காகத் தன் நன்றியைக் காட்டும்முகத்தான், தான் கெட்டாலும் தனக்கு முன்னர் உதவியவர்களுக்காவது உதவி செய்யலாம் என்று பந்துலுகாரு எண்ணுவது இயற்கை தானே?

மேலும் இப்போழ்து ஆச்சாரியார் தனக்கு இடைக்கால சர்க்காரிலிருக்கும் பதவியை ராஜினாமா செய்துவிட்டு சென்னைக்குவந்து முதல் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்

வார் என்றும், அந்த ஏற்பாட்டில் அதிதீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்றும் பேசப்பட்டு வருகின்றது.

பிரகாசம் பந்துலுகாருவின் ஆட்சியைவிட ஆச்சாரியாரின் ஆட்சி எவ்வகையிலும் சிறப்புள்ளதாக இருக்கும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. இவ்வுண்மை நமக்குப்புதிதாகப் புலப்பட்டதன்று. முன்னாள் ஆச்சாரியாரின் 21மாத கால ஆட்சியில் நாம் அறிந்த ஓர் உண்மைதான்.

பந்துலுகாருக்குப் பதிலாக ஆச்சாரியார் முதல்மந்திரியாக வருவாரென்றால் அது பெருமாள் பெத்த பெருமாள் ஆனதை ஒக்கும் என்று கூறலாம். எனவே பந்துலுகாருவின் ஆட்சியில் வெறுப்புற்ற தோழர் காமராசநாடார் ஆச்சாரியாரின் ஆட்சியை யுண்டாக்காமலிருப்பாரா? என்று கேட்கிறோம்.

தோழர் காமராசநாடாரைத் திருப்தி செய்யும் நோக்கத்தான் காமராசநாடாரின் கோஷ்டியினருக்கு மூன்று அல்லது நான்கு மந்திரிப் பதவிகளைக் கொடுத்துவிட்டுத் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்வதில் கண்ணுங்கருத்துமாயிருப்பர் ஆச்சாரியார் கோஷ்டியினர். அதற்காகத்தான் இன்று தோழர் காமராசநாடாருடன் ஒத்துழைப்பதைப்போல் நடிக்கின்றார்கள் என்று கருதும்படியிருக்கிறது. தோழர் காமராசநாடார் ஆச்சாரியாரின்சூழ்ச்சி வலையில் சிக்காமல் ஒரு திராவிடரை முதலமைச்சராக வரும்படிச் செய்வாரா? முயன்றால் முடியும். ஆனால் முயலுவாரா என்பதுதான் ஐயம். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் வரப்போகும் மந்திரிசபையின் தலைவராக ஆக்கப்படுவார் என்று பலமாகப் பேசப்படுகிறது. இப்பேச்சு உண்மையாகுமா?

## 'மருத்துவன்'

நாமக்கல் தோழர் எஸ். கருப்பையா பண்டிதர் அவர்களைப் பதிப்பாசிரியராகக்கொண்டு 'மருத்துவன்' என்ற மாத வெளியீடு நாமக்கல், திருச்சிரோடிலிருந்து வெளிவரும் என்று பதிப்பாசிரியர் கருப்பையா பண்டிதர் அறிவிக்கிறார்.

---

உண்மையாவது காமராஜரின் முயற்சியில்தான் உள்ளது.

எனவே திராவிட மக்களை மீண்டும் ஒரு பார்ப்பனர் கையில் ஒப்படைக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியது தோழர் காமராச நாடாரின் பொறுப்பு அதைஅவர் உணரவேண்டுமே?

ஆனால் திராவிட இனத்தைச் சேர்ந்த ஒருவர் காங்கரஸ் மந்திரிசபையின் தலைவராக வருவதால் திராவிட கழகத்தினருக்கு நன்மை கிட்டும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

காங்கரஸ் திராவிடர்கள், என்று 'தாங்கள் திராவிடர்கள்' என்ற உண்மையை உணர்கிறார்களோ அன்றுதான் அவர்களால் நாட்டிற்கும், மக்களுக்கும் நன்மை செய்யமுடியும். அவர்கள் 'தாங்கள் திராவிடர்கள்' என்ற உண்மையை உணரும் நாள் மிக அண்மையில் வரப்போகின்றது என்பது மாத்திரம் உறுதி. 'திராவிடர்கள்தான் தாங்கள்' என்ற உணர்ச்சி பெறாத வரையில் அவர்களால் திராவிடர்களுக்கு நன்மை உண்டாகும் என்று திராவிடர் கழகம் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் பெரியார் அடிக்கடி கூறுவதுபோல 100க்கு 3-பேராகவுள்ள பார்ப்பனர்கள் நம்நாட்டை ஆள்வதைவிட 100க்கு 97பேராகவுள்ள திராவிட இனத்தில் தோன்றியவர்கள் திராவிடநாட்டை ஆளட்டும் என்றுதான் நாம் இதைக் கூறுகிறோம்.

---

## கோவை ஜில்லா தோழர்களுக்கு

நமது அர்ச்சுனன் அவர்களுக்கு நாம் உண்மையில் மரியாதை செலுத்துபவர்களாயிருந்தால் அவர் விட்டுப்போன நிதி வேலையைப் பூர்த்தி செய்வது நமது கடமையல்லவா?

ஆகவே கோவை ஜில்லா தோழர்கள் நிதி விஷயத்தில் கவனம் செலுத்தி இம்மாத [பிப்ரவரி] இறுதிக்குள் பெரியார் அவர்களிடம் நமது கோட்டா தொகையைக் கொடுத்துவிடவேண்டியிருக்கிறது.

ஏற்கனவே நம் தோழர் என். இ. பாலகுரு அவர்களிடம் டிக்கட்டுகளைப் பெற்றுள்ள தோழர்கள் வசூலித்த தொகையையும், பாக்கி டிக்கட்டுகளையும் உடனே தயவுசெய்து எமக்கு C/o "குடி அரசு" ஈரோடு விலாசத்துக்கு அனுப்பிவைக்கக் கோருகிறேன்.

எம். கே. குகநாதன்,
கோவை ஜில்லா,
நிதிக்கமிட்டி தலைவர்.

## மாகாணத் தமிழாசிரியர் இரண்டாவது மாநாடு

மாகாணத் தமிழாசிரியர் இரண்டாவது மாநாடு மார்ச்சு 1, 2 தேதிகளில் சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில் தோழர் ரா. பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி எல்., அவர்கள் தலைமையில் நடைபெறும். கல்வி அமைச்சர் தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் பி. ஏ. பி. எல்., பேராசிரியர் மு. வரதராசனார், பி. ஓ. எல்., எம். ஓ. எல். ஆகிய தோழர்களும் மற்றும் பல அறிஞர்களும் மாநாட்டில் கலந்து கொள்வர்.

## திராவிட மாணவர்க்கழகம்

4-2-47 மாலை 5½ மணிக்குக் குத்தாலம் மியூசன் எலிமென்டரி பாடசாலையில் தோழர் எம். இரத்தினசாமி அவர்கள் தலைமையில் குத்தாலம் உயிர்நிலைப்பள்ளி திராவிட மாணவர்க் கழகம் பலருடைய எதிர்ப்புக்கிடையே நிறுவப்பட்டது. தோழர்கள் எம். ஏ. சபூர் தலைவராகவும், ஏ. கும்பலிங்கம் துணைத் தலைவராகவும், பி. எஸ். கணேசன் செயலாளராகவும், வி. இராமலிங்கம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## நெல்லை மாவட்ட தோழர்கட்கு

நெல்லை மாவட்டத்தில் நிதி திரட்டுவதற்காக என்னிடம் டிக்கட் புத்தகம் பெற்ற தோழர்கள் வசூலான பணத்தையும், மீதியாயுள்ள டிக்கட் புத்தகங்களையும் உடனே எனக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன். பெரியார் அவர்கள் இம்மாத இறுதியில் நமது மாவட்டத்திற்கு வருவார்கள். அப்போது அவர்களிடம் நமது மாவட்ட கோட்டாவாகிய 5005 ரூபாயைக் கொடுக்கவேண்டியிருப்பதால் தாமதியாது தோழர்கள் உடனே வசூலான பணத்தையும் மீதி டிக்கட்டு புத்தகங்களையும், அனுப்பும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன். முன்பு கூட்டங்கள் நடைபெறுவதாக இருந்த ஊர்களில் மீண்டும் கூட்டம் நடைபெறும். இங்ஙனம்,

கே. வி. கே சாமி, செயலாளன்,
நெ. மா. திராவிடர் கழகம்,
தூத்துக்குடி.

## பிறப்பு

தீவிர தன்மதிப்பியக்கவாதியும், குடியரசு சந்தாதாரரும், 11-8-44ல் தன்மதிப்பியக்கத் திருமணம் புரிந்துகொண்டவருமான தோழர் கா. பெ. மாரிமுத்து அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் மாகதயமாள் அவர்களுக்கு ஆண்குழந்தை பிறந்தது. சிங்கப்பூர், நீயம்பாறு ரோடு, 488ம் எண் இல்லத்தில் பாரதிதாசன் பள்ளிக்கூடத் தலைவர் தோழர் பெ. சண்முகம் அவர்கள் தலைமையில் 12-1-47ல் அக்குழந்தைக்குப் 'பாண்டியன்' என்று பெயரிடப்பட்டதின் நினைவாகக் குடியரசுக்கு 5 ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

16-1-47 காலை 10 மணிக்குப் புதுக்கோட்டை அறிவு வளர்ச்சிக் கழக உபதலைவர் தோழர் எஸ். வி. சுப்பையா அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் ராஜூ அம்மாள் அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குத் தோழர் கோதர்மாராஜ் அவர்களால் இளங்கோ எனப் பெயரிடப்பட்டது. அதன் நினைவாகக் குடியரசு விடுதலை, திராவிடநாடு ஆகியவற்றிற்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

## திருச்சி மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் குழு தேர்தல் கூட்டம்

திருச்சி மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக்குழுதேர்தல்கூட்டம் 9-2-47 ஞாயிறு காலை 11மணிக்குத் தென்னூரில் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் கூடியது. 1947 ஆண்டிற்குக் கீழ்கண்டவர்கள் நிர்வாகக் குழுவினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆலோசகர்: தி. பொ. வேதாசலம்
தலைவர்: எ. சின்னதுரை,
துணைத்தலைவர்: என் சங்கரன்
செயலாளர்கள்: எம். நடராசன்
ஆர். சுலைமான்

நிர்வாக அங்கத்தினர்கள்:- ஐ எஸ் பிரான்விஸ், எ வைதரியம், கே. சே. சாமி, எம் எம். சுந்தரம், டி. சே பாபு, எஸ். நெடுமாறன், தி. ஆ. மணிக்கவாசகம் (நகரம்). எஸ். தீனதயாளு (தென்னூர்), சே. செகதீசன் (பீமநகர்) ராமானுஜம் (புத்தூர்), கே. வி எம். லெட்சுமணய்யா, மணி (உறையூர்), ஜயம்பெருமாள் (கல்கண்டார் கோட்டை), ஜி. பராங்குசம் (பொன்மலை), பரமசிவம் (சீரங்கம்) ராமசந்திரன் (பிச்சாண்டார் கோவில்) முனியாண்டி [மணச்சநல்லூர்] என். கே. கிருஷ்ணசாமி [துறையூர்] எஸ். எஸ். மணி [சிறுகனூர்] சின்னதுரை [பூதலூர்], சோமசுந்தரம் [மணக்கால்] ராஜா [குளித்தலை]

பகல் 12மணிக்குத் தலைவர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

## திருமணம்

தோழியர் விஜயலட்சி அம்மையாரின் உடன்பிறந்தார் தோழர் பி. வேதாஜலத்திற்கும், பத்மாவதிக்கும் 29-12-46 பெங்களூர் கண்டோன்மெண்டில் தோழர் எச் ஆர் குருவாரெட்டி பி. எ., பி எல்., அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் பார்த்தசாரதி பேசியபின்னர் பெரியார் ஈ. வெ. ரா. மூன்றுமணிநேரம் 'தமிழரும் திருமணமும்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். திருமணத்திற்குச் சுமார் 5:00 பேர் வந்திருந்தனர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

1849செப்டம்பர் மாதம் 26ந் தேதியோடு புரட்சிக்காரர்களின் கை சாய்ந்தது. புரட்சியினர் மனந்தளர்ந்துவிட்டனர். இதனால் மறைவிடம் தேடலாயினர். மார்க்ஸ் லண்டனிலிருந்துகொண்டு எப்படி உயிர் வாழ்வது என்பதைக் குறித்து சிந்திக்கலானார். ஏஞ்சல்சும் நண்பனிடம் வந்து சேர்ந்தார். நண்பனைவிட்டுத் தாம் மட்டும் தந்தையுடன் போய்ச் சேர்ந்து சுகம்பெறலாமென்பது புத்திசாலித்தனமானதல்ல என ஏஞ்சல்ஸ் நினைக்கலாயினர்.

1850ல் இவர்கள் பொதுவுடைமைக் கட்சியை மீண்டும் உயிர்ப்பிக்கலாம் என முயற்சி செய்தார்கள். ஆனால் சிதறுண்ட இயக்கத்தை ஐக்கியப்படுத்துவது முயல்கொம்பாயிற்று.

1847ம் வருஷம் ஆரம்பித்த புரட்சிப் போருக்குக் காரணம் அப்பொழுதிருந்த பொருளாதார மந்தமென்றும், இப்பொழுது திடீரென கலிபோர்னியாவில் தங்கவயல்கண்டுபிடித்ததனாலேயே இப்பொழுது புரட்சியில் மக்களுக்கு மனம் திரும்பாதிருக்கிறதென்றும் ஓர் அறிக்கையின் மூலமாக இவர்கள் விளக்கினார்கள்.

பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்தவரில் மெஜாரிட்டியினர் இவர்களது யோசனையை ஆதரித்தனர். ஆனால் அந்த ஸ்தாபனங்களுக்குள் இருந்துவந்த தகராறுகளால் ஐக்கியப் படுத்துவது முடியாது போயிற்று. முடிவாக 1850ம் வருடம் செப்டம்பரில் மத்திய காரியக்கமிட்டியில் ஏற்பட்ட வாக்குவாதங்களால்—தர்க்கங்கள் தோன்றியதால் பொதுவுடைமை இயக்கம் மறைந்துவிட்டது. (தொடரும்)

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பூரண சுதந்திரத்திற்கோ விடுதலைக்கோ விரோதமாக இருக்கவும் இந்நாட்டு மக்களை வெறுக்கவும் என்ன காரணம் இருக்கமுடியும்? ஆரிய மதத்தில், உழைக்க ஒரு ஜாதி, ஊரார் உழைப்பிலேயே உண்டு பாடுபடாமல் வாழ ஒரு ஜாதி என்று ஏற்பட்டுவிட்டதால் இந்தத் தத்துவத்துக்குமாறான மதங்களோடு சதா போர் தொடுத்து, கலகமூட்டித் தங்கள் நலனைப் பாதுகாக்கவேண்டி இருப்பதால் இப்படிப்பட்ட சமுதாய சமதர்ம மக்களும் மதமும் 100க்கு 95 பேர் இருக்கும் நாட்டில் இந்த மதப்போராட்டக் கொடுமை இருந்து வருகிறது.

மதம் மக்களுக்குத் தொண்டு செய்ய, அன்பு செலுத்த ஏற்பட்டது என்றும், மதம் மக்களை ஒன்று சேர்த்து சமத்துவமாய் நடத்தவே ஒழிய வேறுபடுத்தி மேல்கீழ் பிறப்பாய், வகுப்பாய் நடத்த அல்ல என்றும் ஆரிய மதம் உணருமானால் இன்று இந்த நாட்டில் கலவரத்துக்கு, மதப் போராட்டத்திற்கு இடமே இருக்காது.

நானும் பார்க்கிறேன் 'மதத்துக்காக உயிர்விடுங்கள்' மதத்தைக் காப்பாற்றுங்கள், மதத்தைப் பழிக்காதீர்கள்" என்றெல்லாம் காட்டுமிராண்டிப் பிரசாரம் தான் மதத்தின்பேரால் மகான்கள் என்பவர்கள் எல்லாம் பிரசாரம் செய்கிறார்களே தவிர இந்தக் கொள்கைகளால்தான் மதம், காப்பாற்றப்படமுடியும் என்று கருதப்படுகின்றதே தவிர மதத்தில் அன்பு, உபசாரம், மற்றவன் மன நோகாமல் நடத்தல் ஆகிய காரியங்கள் எங்கே கற்பிக்கப்படுகின்றன என்று கேட்கிறேன்.

மதத்துக்காக உயிரைவிடுங்கள் என்று உபதேசித்த உபதேசம்தான் காலித்தனத்துக்கும் கயவாளித்தனத்துக்கும் பெரிதும் காரணம் என்று சொல்லுவேன்.

மதத்தைக் காப்பாற்ற உயிர் விடுங்கள் என்றால் என்ன அருத்தம்?

'உன் மனைவியைக் காக்க உயிர் விடு" என்றால் என்ன அருத்தம்?

"உன் மனைவியை ஒருவன் தொட்டால் அவனைக் கொல்லு, அவனை உதை, அந்தக்காரியத்தில் உன் உயிர் போவதாய் இருந்தாலும் அதற்குத் துணிந்து அவன்மீது பாய்வாயாக" என்பதல்லாமல் அதில் தத்துவார்த்தம் என்ன சொல்லமுடியும்? இந்த உபதேச மதத்தால் மக்களுக்கு மூர்க்கத்தனம் உண்டாகுமா அன்புணர்ச்சித்தன்மை உண்டாகுமா? என்று கேட்கிறேன்.

"என் மதம் அன்பு மதம், அன்பே கடவுள், கடவுளே அன்பு. ஆனால் என் மதத்தையோ, கடவுளையோ எவனாவது குற்றம் சொல்லுவானேயானால் ஒரே பாய்ச்சல், ஒரே குத்து ஒன்று அவன் சாவது அல்லது அந்த வேலையில் நான் சாவது" என்பது எட்பேர்ப்பட்ட அன்பு மதம் என்று யோசித்துப்பாருங்கள்.

மதத்துக்கு உள்ள இந்தக் கருத்து, இந்தத் தத்துவம் மாறினாலொழிய நம் நாட்டில் மக்களுக்குள் சாந்தி, சமாதானம் ஒருநாளும் நிலவாது என்று தைரியமாய்ச்சொல்லலாம். மத தத்துவம் என்றால்என்ன? மதம் எதற்காக என்பதை மக்களுக்குச் சரியானபடிப் போதிக்கவேண்டும். அந்த மாதிரி உண்மையாகவும் உறுதியாகவும் போதிக்கப்படுமானால் திராவிடநாட்டில் இஸ்லாம் திராவிடர்கள் என்றும், இஸ்லாம் அல்லாத திராவிடர்கள் என்றும் பிரிவு உணர்ச்சி இருக்க இடமே இருக்காது. மதத்துக்கும், நடத்தைக்கும் எண்ணத்துக்கும் தான் சம்பந்தமே ஒழிய வேஷத்துக்கும் மதத்துக்கும் சம்பந்தம் இல்லை என்று கருதப்படுமானால் திராவிடர்கள் எல்லோரும் இஸ்லாமியர்களே ஆவார்கள். இஸ்லாமியர்கள் எல்லோரும் திராவிடர்களே ஆவார்கள் உண்மையில் இருவருக்கும் பேதம் இல்லை—ஒருவர் வீட்டில் ஒருவர் உண்ணவும், ஒருவர் வீட்டில் மற்றவர் சம்பந்தம் செய்துகொள்ளவும் தடையில்லை என்று ஆகிவிட்டால் மற்றபடி மதப் போதத்துக்கு வேலை என்ன இருக்கமுடியும்? ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடக்கூடாது, ஒருவரை ஒருவர் தொடக்கூடாது, ஒருவருக்குள் ஒருவர் சம்பந்தம் செய்துகொள்ளக்கூடாது என்ற நிபந்தனை வைத்துக்கொண்டு யாரும் ஒரே மதமாய் இருந்தாலும் இது பித்தலாட்டம் அல்லது சிலர் சுயநலவஞ்சகம் என்பதல்லாமல் ஒரு மதம் என்று சொல்ல முடியுமா? என்று கேட்கிறேன். எனவே, [தொடரும்]

## வாழ்க்கை ஒப்பந்தம்

2-2-47ல் அருப்புக்கோட்டையில் தோழர் கு. குருசாமி அவர்கள் இல்லில், தோழர் எம். எஸ் இராமசாமி அவர்கள் தலைமையில் ஆறுமுகம்—கஸ்தூரியம்மாள் திருமணம் இனிது நிறைவேறியது. அ. பெ. இரத்தினவேல் கே. இராமசாமி, எஸ். எஸ், பழனிச்சாமி ஆகிய தோழர்களும் தலைவரும் சீர்திருத்தத்திருமணம் குறித்துப் பேசினர்: தோழர் சி. வ. சண்முகசுந்தரம் நன்றிகூறினார். குடியரசு, விடுதலை, திராவிடநாடு வளர்ச்சிக்கு ஒவ்வோர் ரூபாய் கொடுக்கப்பட்டது.

0 0

2-2-47 காட்டூரில் (திருவாங்கூர்) ஆரூர் தோழர் ஆர் சிங்கம் தலைமையில் சீனிவாசன்—சீதாலட்சுமி திருமணம் நடைபெற்றது. கே. கே. நீலமேகம், இரா. நெடுஞ்செழியன், சண்முக மகாலிங்கம், அரங்கராசு, டாக்டர் பாலகிருட்டிணன் ஆகிய தோழர்கள் சீர்திருத்த மணங்குறித்துப் பேசினர். குடியரசு, விடுதலை, திராவிடநாடு வளர்ச்சிக்கு ஒவ்வொரு ரூபாய் கொடுக்கப்பட்டது.

## மறைவு

1-2-47 காலை 6 மணிக்குச் சிங்கம்புரி தன்மதிப்பியக்கத் தோழரும், குடியரசு ஏஜண்டுமான சே. கு. பெரிய ஐயா அவர்கள் இயற்கையெய்தினார் என்ற செய்திகேட்டு நாம் பெரிதும் வருத்தத்தோடு எமது அனுதாபத்தையும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் தோழர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

0 0

பண்ணுருட்டியில் முதன்முதல் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த தோழர் வீ டி. இராமச்சந்திரன் அவர்களின் தங்கை கண்ணம்மாள் தமது இல்லத்தில் 29-1-47 இரவு 8 மணிக்கு இயற்கை எய்தியது குறித்து வருத்தத்தோடு எனது அனுதாபத்தையும் அன்னார் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பி ஜானகிராமன், பண்ணுருட்டி.

Edited, Printed, and Published by N.Karivaradaswamy at the Tamillan Press, 42, Cutcherystreet, ERODE.